சார்பு நீதிமன்றம், பல்லடம்.

MCOP.No 276/2023

மனுதாரர் தரப்பு சாட்சி : PW2

பெயர் மற்றும் வயது : கனகராஜ்

தந்தை பெயர் : ரங்கநாதன்

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாள் திங்கட்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது

**மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ளது எனது கையெழுத்து தான். நான் சொன்ன விவரங்களை கணினியில் பதிவு செய்து அதனை நான் சரிபார்த்து கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக

1. மருத்துவ விடுப்பு அசல் ம.சா.ஆ. 8 ஆகவும்
2. மருததுவ பில்கள் ம.சா.ஆ. 9 ஆகவும்,
3. நுண்கதிர் படம் ம.சா.ஆ. 10 ஆகவும்,
4. மனுதாரர் மகனின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ. 11 ஆகவும்
5. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ. 12 ஆகவும்

**3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. இந்த விபத்து தொடர்பாக யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது என்றால் விபத்து சமயத்தில் அருகில் இருந்தவர்கள் கொடுத்துள்ளார்கள், போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. விபத்து சமயத்தில் வாகனத்தை எனது மாமனார்தான் ஓட்டிச்சென்றார் என்றால் சரிதான். மேற்படி எனது மாமனார் வாகனத்தை திரும்பும் போது தான் விபத்து நிகழ்ந்தது என்றால் சரிதான். எனக்கு சாதாரண காயம் ஏற்பட்டதாகவே சொல்லப்பட்டுள்ளது எனவே நான் கோரியுள்ள இழபபீடு தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி விபத்து சமயத்தில் 1 வது எதிர்மனுதாரர் இயக்கிய வாகனத்திற்கு முறையான Badge இல்லாததால் 3 வது எதிர்மனுதாரர்

இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது மாமனாரின் கவனக்குறைவால் இந்த மனு தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---